# புதிய நெருக்கடி நிலை முன்னுரிமைப் பிரிவு மற்றும் இடமாற்றச் செயல்முறை

Toronto Community Housing

**நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றத்துக்கு யார் விண்ணப்பிக்க முடியும்?**
இடமாற்றத்துக்கான வேண்டுகோளினை வாடகைக் குடியிருப்பாளர் (வாடகை உடன்படிக்கையாளர்)செய்ய வேண்டும்.

**நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றத்துக்கு நான் எப்படி விண்ணப்பிக்க வேண்டும்?**
நீங்கள் ஒரு நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றத்துக்கான விண்ணப்பத்தினை எந்த நேரத்திலும் ஏதோவொரு ரொறொன்ரோ சமூக வீட்டுவாரியக் காரியாலயத்தில் செய்ய முடியும். நீங்கள் ஓர் இடமாற்றத்துக்கு வேண்டிக் கொள்ளும் சமயத்தில் உடனடியாகவே ஒரு விண்ணப்பப் பத்திரத்தை அல்லது சம்பந்தப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை. உங்கள் விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கும் விண்ணப்பத்திற்கான ஆதார ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கும் உதவி செய்யவென உள்ளேற்பு விசேட பணியாளர் (Intake Specialist) ஒருவர் இருப்பார். இதற்கான செயல்முறையினை அடுத்து வரும் பக்கத்தில் உள்ள வரைபடம் விளக்குவதைக் காணுங்கள்.

**ஒரு நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றத்துக்கு யார் தகைமை உடையவராக இருப்பார்?**
இதற்கான தகைமையை பெறுவதற்கு நீங்கள் அல்லது உங்கள் குடியிருப்பு அலகு அங்கத்தவர்களுள் ஒருவர் பின்வரும் ஆறு பிரிவுகளுள் ஒன்றைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்:

1. நீங்கள் வாழுகின்ற குடியிருப்பு அலகில் கடந்த ஆறு மாத காலத்தினுள் நிகழ்ந்த ஊறுபடுத்தும் சம்பவம் (traumatic incident) ஒன்றினால் பாதிக்கப்பட்ட ஒருவர்
2. உங்கள் குடியிருப்பு அலகில் கடந்த ஆறு மாத காலத்தினுள் நிகழ்ந்த ஊறுபடுத்தும் சம்பவம் ஒன்றிற்கு சாட்சியாக இருந்த ஒருவர்
3. நீங்கள் வாழுகின்ற குடியிருப்பு அலகில் உங்கள் குடியிருப்பைச் சேர்ந்த இன்னுமொரு அங்கத்தவருக்கு கடந்த ஆறு மாத காலத்தினுள் நிகழ்ந்த ஓர் ஊறுபடுத்தும் சம்பவத்துக்கு சாட்சியாக இருந்த ஒருவர்
4. கடந்த மூன்று மாத காலத்தினுள் பயமுறுத்தலுக்கு உள்ளான பாதிக்கப்பட்ட ஒருவர்
5. கடந்த மூன்று மாத காலத்தினுள் பயமுறுத்தலுக்கு உள்ளான சாட்சியாளர் ஒருவர்

6. ஒன்ராறியோ மனித உரிமைகள் விதிக் கோவையின் கீழ் பாதுகாப்பு வழங்கப்படும் ஒரு வலுக்குறைவு அல்லது நிலைமையை பெற்றிருக்கும் ஒருவர் குறிப்பிட்ட வசதிக்கான உரிமை பெறுவதற்கு இடமாற்றம் ஒன்று மட்டுமே வழியாக இருத்தல்.

**எனக்கு இடமாற்றம் பெறுவதற்கு தகைமை உள்ளது என்பதை ரொறொன்ரோ சமூக வீட்டுவாரியம் எப்படி அறிந்து கொள்ளும்?**

உள்ளேற்பு விசேட பணியாளர் ஒருவர் உங்களுடன் இணைந்து செயற்பட்டு உங்களுக்கு தேவைப்படும் ஆவணங்களை காவல் துறையினர், மருத்துவ நிபுணர்கள் அல்லது வேறு அவசியமான யாரிடம் இருந்தும் பெறுவதற்கு உங்களுக்கு உதவி புரிவார்.

**எனது விண்ணப்பம் தொடர்பிலான முன்னேற்ற நிலை(status) பற்றி நான் எவ்வாறு மேலதிக தகவலினைப் பெற முடியும்?**

நீங்கள் நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றம் ஒன்றுக்கு வேண்டிக் கொள்ளும் பொழுது உங்களுக்கு ஈசிற்றாக் எண் (EasyTrac number) எனப்படும் இலக்கம் ஒன்று வழங்கப்படும். வேண்டுதலின் பின் இரண்டு வேலை நாட்களின் உள்ளாக உள்ளேற்பு விசேட பணியாளர் உங்களுடன் தொடர்பு கொள்வார். உள்ளேற்பு விசேட பணியாளர் அடுத்து வரும் படிமுறைச் செயற்பாடுகள் பற்றி உங்களுடன் கலந்துரையாடி, தங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தகவலினையும் தருவார். இதனால் நீங்கள் உங்கள் இடமாற்றக் கோரிக்கை பற்றி தொடர்ந்து அவர்களுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

# நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றம் ஒன்றுக்கு விண்ணப்பித்தல்

வாடகைக் குடியிருப்பாளர் நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்றம் வேண்டுகிறார். இடங்கள்:

- செ.பி. காரியாலயம்
- சேவைபெறுநர் பராமரிப்பு நிலையம் அல்லது
- 931 யொங் வீதி

தேவைப்பட்டால் பணியாளர்கள் குடியிருப்பாளருக்கு உடனடியான அத்துடன்/அல்லது தற்காலிக ஆதார உதவிகள், புகலிடச் சேவைகள் பற்றித் தகவல் வழங்குவர்

வாடகைக் குடியிருப்பாளர் தமது வேண்டுகோளைப் பின் தொடரவென ஓர் ஈசிற்றாக் எண் பெறுகிறார்

உள்ளேற்பு விசேட பணியாளர் நெருக்கடி நிலை முன்னுரிமை இடமாற்ற வேண்டுகோளைப் பெறுகிறார்

உள்ளேற்பு விசேட பணியாளர் வாடகைக் குடியிருப்பாளரை சந்தித்து விண்ணப்பம் மற்றும் நிலைமை பற்றி கலந்துரையாடுகிறார்

உள்ளேற்பு விசேட பணியாளர் வாடகைக் குடியிருப்பாளர் சார்பாக எவருடனும் தொடர்பு கொள்ள முன்பு வாடகைக் குடியிருப்பாளரின் சம்மதம் பெறுவார்

உள்ளேற்பு விசேட பணியாளர் வாடகைக் குடியிருப்பாளர், பணியாளர்கள் மற்றும் பங்காளர்கள் (உ-ம்: பொலிஸ்) ஆகியோருடன் தொழிற்பட்டு ஆவணங்களைப் பெற்று விண்ணப்பப் பத்திரத்தை பூர்த்தி செய்வார்

உள்ளேற்பு விசேட பணியாளர் விண்ணப்பத்தை பரிசீலித்து, ஒரு முடிவை எடுத்து வாடகைக் குடியிருப்பாளருக்கு வாய்மொழி மற்றும் எழுத்து வழியாக அறிவிப்பார்

அங்கீகாரம் கிடைத்தால் உள்ளேற்பு விசேட பணியாளர் குடியிருப்பு வதிவாளர்களுக்கு மூன்று குடியிருப்பு அலகுகள் வரையில் தெரிவு செய்யும்படி காட்டுவார்